திரு. துரை முருகன் : ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் பணம் கொடுத்து இந்த இல்லம் கட்டப்பட்டிருக்கிறது. ஊராட்சிப் பணியாளர்கள் இதற்கென்று பணம் எதுவும் தரவில்லை, அப்படி உதவி எதுவும் இல்லாத நிலையில் ஊராட்சிப் பணியாளர்கள் சங்கத்தினை இத்துடன் ஏன் இணைக்க வேண்டும்? இதில் ஏதாவது உள்நோக்கம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அதிகாரப் பற்றற்ற ஒரு சங்கத்தின் மூலம் இது இயங்க வேண்டும் என்பதற்காகத்தான், அவர்கள் மூலமாக திறப்பு விழா நடைபெற்றது. ஆனால் இப்போது இதன் நிர்வாகம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின்கீழ் தான் இருந்து வருகிறது.

திரு. துரை முத்துசாமி : இதே முறையில் அனைத்து மாவட்டங்களிலும் ஊராட்சி இல்லங்களை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஊராட்சி மன்றங்களே சேர்ந்து முடிவு செய்ய வேண்டியது.

திரு ப. சந்திரன் : வேலூரில் கட்டப்பட்டுள்ள இந்த இல்லத்தில் போதிய அறைகள் இருந்தும், தொலைபேசி வசதி, குடிநீர் வசதி போன்றவைகள் இல்லை. இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

கூத்தாநல்லூரில் அங்காடி.

*350 வினு—திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூரில் சுமார் 80 ஆயிரம் திட்டத்தில் காய்கறி மார்க்கெட் அமைக்கக் கட்டடம் கட்ட அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) இதற்கு அரசு அனுமதி தேவையில்லை. பேரூராட்சிக்கே அதிகாரம் இருக்கிறது.

1978 மார்ச் 2]

(ஆ) கூத்தாநல்லூர் பேரூராட்சி ரூ, 85,000 மதிப்பீட்டுத் தொகையில் காய்கறி மார்க்கெட் கட்டடம் கட்டுவதற்கு 30—6—77 நாளைய தீர்மானத்தில் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேற்படி மதிப்பீடு திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை மற்றும் கிராம வேலைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி கோரி அனுப்பப் பட்டுள்ளது என்றும் அவர் அனுமதி வழுங்கியவுடன் வேலை துவக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள், இங்கு சைக்கிள் மூலமாக வீடுகளில் கறிகாய் கொண்டு போய் கொடுக்கும் ஒரு திட்டத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கூத்தாநல்லூரில் உள்ள கட்டடத்தைப் பற்றிய கேள்வி. நீங்கள் கேட்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

மன்னார்குடியில் பொதுக்குழாய்கள்.

*351 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் தெருக்களுக்கு பொதுக்குழாய்கள் இணைப்பதில் சிக்கல் உள்ளதா ?

(ஆ) ஆயுள் காப்பீட்டு கழகம் தெருக்களுக்கு இணைப்புக் கொடுக்கும் திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மன்னார்குடி குடிநீர் திட்டத்திற்காக அரசிடமும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமும் மன்னார்குடி நகராட்சி வாங்கியுள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ப, நிதிநிலையை சீரமைக்கக் கருதி, கடந்த இரண்டாண்டுகளாக நகராட்சி எல்லைக்குள் தெருக் குழாய்கள் அமைப்பது குறைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக வீட்டுக் குழாய் இணைப்புகள் அதிகமாகத் தரப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

சிதம்பரத்திற்கு குடிநீர் வழங்கல்.

* 352 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நகராட்சிக்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?